DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 131/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சீதா லெட்சுமி |
| Spouse Name | : | நாகராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

நான் 1ம் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 02.01.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கணினி பதிவிறக்க **நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. 02.02.2018 தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. 10.01.2018 தேதியிட்ட TN 63 W 6323, MVI Report கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. 10.01.2018 தேதியிட்ட TN 63 R 3151 TVS XL, MVI Report கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. 07.11.2017 தேதியிட்ட TN 63 W 6323 insurance policy கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 20.01.2018 தேதியிட்ட Postmortem Certificate கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. ராமன் வாரிசு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
8. செல்வி வாரிசு சான்றிழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
9. ராமன் இறப்புச் சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
10. செல்வி இறப்புச் சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
11. 02.01.2018 தேதியிட்ட காவல் துறை வரைபடம் கணினி பதிவிறக்க **நகல் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
12. 01.01.2018 தேதியிட்ட Accident Register கணினி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
13. ராமன் Ex service Bio Data நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
14. 2017 – 2018 தேதியிட்ட ராமன் ID Card நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
15. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
16. 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
17. 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
18. 4ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
19. 1ம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
20. 2ம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

21. 3 ம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகம் **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
22. 4 ம் மனுதாரரின் வங்கிக் கணக்கு புத்தகம் **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1 ம் எதிர்மனுதாரர் தரப்புகுறுக்கு விசாரணை:**

இந்த விபத்து நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் விபத்து கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனா என்றால் சம்பவம் நடந்த பள்ளி அருகில் சென்று பார்த்துவிட்டு அதன் பின்னீடு மருத்துவமனை சென்று பார்த்தேன். எனக்கு எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் நெற்புகபட்டியில் திருமணம் நடைபெற்றது, எனது கணவர் இறந்துவிட்டார். 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் எனது உடன் பிறந்த சகோதரிகள் அவர்கள் திருமணம் நடைபெற்று வெளியூர் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 4 ம் மனுதாரர் இராமசாமி என்பவர் யார் என்றால் எனது தம்பி, அவருக்கு விபத்தின் போது திருமணம் நடைபெறவில்லை, தற்போது திருமணம் நடைபெற்றுவிட்டது. இந்த விபத்து எனது அப்பா முறையாக சைகை செய்யாமல் திடீர் என்று வாகனத்தை இடதுப்பக்கத்தை திருப்பியதால் தான் அவரது கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த விபத்தை பொறுத்து 1 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடுகொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. இந்த விபத்தில் இறந்தவர் என் தகப்பனார் இராமன் என்றால் சரிதான். எனது அப்பா இராமன் விபத்தின் போது என்ன வேலை செய்தார் என்றால் இராணுவத்தில் போர் வீரராக பணியாற்றி பின்னர் செல்லப்பன் பள்ளியில் காவலராக இருந்தார். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், கேள்விப்பட்டுதான் எனக்கு தெரியும். 2, 3, 4 மனுதாரர்கள் யார் என்றால் 2, 3 மனுதாரர்கள் எனது தங்கைகள், 4 ம் மனுதாரர் எனது சகோதரர் ஆவார். இவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம் தற்போது திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள். எனது கணவர் 2006 ல் இறந்துவிட்டார், அதனால் அதில் இருந்து எனது பெற்றோர் வீட்டில் இருந்தேன். எனது அப்பா செல்லப்பன் வித்யாமந்திர் பள்ளியில் காவலராக இருந்ததற்கான சம்பளச் சான்று

எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதனை கொடுக்கமாட்டார்கள். விபத்து நடந்த தேதி 01.01.2018 என்றால் சரிதான்.

2. எனது தந்தைக்கு எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் 01.01.2018 தேதியன்று எனது அப்பா தனது TVS XL இருசக்கர வாகனத்தில் பள்ளிக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்தின்போது எனது அப்பாவிற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தானது எந்த வாகனங்களுக்கு இடையே ஏற்பட்டது என்றால் இருசக்கர வாகனம் மோதி ஏற்பட்டது. அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கும் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த விபத்திற்கு உண்மையான காரணம் எனது தந்தை தான் என்றும் அவர் தனது வாகனத்தை முறையாக ஓட்டாமல் இடது புறத்திலிருந்து வலது புறமாக எந்த ஒரு சமிக்கையும் செய்யாமல் மேற்படி இருசக்கர வாகனத்தை திருப்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலை மற்றும் மூக்கில் காயம் ஏற்பட்டது. விபத்தின் போது எனது அப்பா முறையாக தலைகவசம் அணியாமல் வாகனம் ஓட்டினார் என்றால் சரியல்ல, தலைக்கவசம் அணிந்து தான் வாகனம் ஓட்டினார். இந்த விபத்திற்கு உண்மையான காரணம் எனது தந்தை தான் அதனால் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

# DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP. No. | : | 131/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜான் கென்னடி |
| Father's Name | : | அகஸ்டின் ரெத்தினம் |
| Village | : | காரைக்குடி |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2026

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. எனது ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.**

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து சமயத்தில் நான் அங்கு வந்துகொண்டிருந்தேன். இறந்து போன இராமன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை மற்றொரு இருசக்கர வாகனம் பின்னால் வந்து பள்ளியின் முன்பு மோதியது என்றால் சரிதான். பள்ளிக்கு முன்பாக திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை அடுத்தார்போல் ஒரு வேகத்தடையும், பள்ளி மெயின்கேட்டிற்கு அடுத்தார்போல் ஒரு வேகத்தடையும் என

இரண்டு வேகத்தடைகள் உள்ளது என்றால் சரிதான். வேகத்தடை இருப்பதால் வாகனம் அதிவேகமாக வர இயலாது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து தொடர்பாக நீதிமன்றத்திலோ, காவல் நிலையத்திலோ நான் எந்த சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரரையோ, இறந்து போன இராமனயோ எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனக்கு அவர்களை தெரியாது. இறந்து போன நபருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலையில் ஏற்பட்டது. இறந்து போன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றுசொன்னால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். நான் மனுதாரர்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதாலும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் இறந்து போன இராமன் என்பவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் விபத்து பற்றி காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியமான வாகனத்தை ஓட்டிவந்த ரகு குறைவான வேகத்தில் வந்து கொண்டிருந்தபோது இறந்து போன இராமன் எவ்வித சைகையும் செய்யமால் திடீர் என்று பள்ளி பக்கம் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், இந்த விபத்து இராமனின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து சமயத்தில் நான் அங்கு வந்துகொண்டிருந்தேன். இறந்து போன இராமன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை மற்றொரு இருசக்கர வாகனம் பின்னால் வந்து பள்ளியின் முன்பு மோதியது என்றால் சரிதான். பள்ளிக்கு முன்பாக திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை அடுத்தார்போல் ஒரு வேகத்தடையும், பள்ளி மெயின்கேட்டிற்கு அடுத்தார்போல் ஒரு வேகத்தடையும் என இரண்டு வேகத்தடைகள் உள்ளது என்றால் சரிதான். வேகத்தடை இருப்பதால் வாகனம் அதிவேகமாக வர இயலாது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து தொடர்பாக நீதிமன்றத்திலோ, காவல் நிலையத்திலோ நான் எந்த சாட்சியும் சொல்லவில்லை

என்றால் சரிதான். மனுதாரரையோ, இறந்து போன இராமனயோ எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனக்கு அவர்களை தெரியாது. இறந்து போன நபருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலையில் ஏற்பட்டது. இறந்து போன நபர் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றுசொன்னால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். நான் மனுதாரர்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதாலும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் இறந்து போன இராமன் என்பவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் விபத்து பற்றி காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியமான வாகனத்தை ஓட்டிவந்த ரகு குறைவான வேகத்தில் வந்து கொண்டிருந்தபோது இறந்து போன இராமன் எவ்வித சைகையும் செய்யமால் திடீர் என்று பள்ளி பக்கம் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், இந்த விபத்து இராமனின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், மனுதாரர் எனக்கு உறவு காரர் என்பதால் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றும், அதனால் எனது சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.